## காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள மாவட்ட வாழ்வாதார கடன் மேலாண்மை முகமை (District Livelihood Credit Management Agency – DLCA) க்கு மாவட்ட வங்கி ஒருங்கிணைப்பாளர் (District Banking Coordinator) காலிப்பணியிடத்திற்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (CGS–3) துறை அரசாணை (நிலை) எண்.19 நாள் : 01.02.2024 ன்படி மாவட்ட அளவில் அரசு திட்டங்களை சிறப்பாக செயல்படுத்த அனைத்து துறைகளுடனும் ஒருங்கிணைந்து செயல்பட மாவட்ட வாழ்வாதார கடன் மேலாண்மை முகமை (District Livelihood Credit Management Agency – DLCA) அமைக்க தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி பின்வரும் அட்டவணையில் உள்ளவாறு மாவட்ட வங்கி ஒருங்கிணைப்பாளர் பணியிடத்தில் ஓய்வு பெற்ற வங்கி அதிகாரியை ஒப்பந்த அடிப்படையில் நியமிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### அட்டவணை

| வ. எண் | பதவியின் பெயர் | பணியிடங்களின் எண்ணிக்கை | நியமன முறை | ஊதியம்* (ஒவ்வொரு ஆண்டும் 3% உயர்வு) |
|---|---|---|---|---|
| 1 | மாவட்ட வங்கி ஒருங்கிணைப்பாளர் | 1 | ஓய்வு பெற்ற வங்கி அதிகாரி | அதிகபட்சம் ரூ.50,000/– |

**விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி –**

1. மேலாளர்,
   அறிவொளி மையம், காஞ்சிபுரம்.
2. மாவட்ட மகமை, பழைய மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அலுவலக கட்டிடம், காஞ்சிபுரம்.
3. நகர்ப்புற வாழ்வாதார மையம்,
   பூமாலை வணிக வளாகம், காஞ்சிபுரம்.

எனவே, காஞ்சிபுரம் மாவட்டத்தில் செயல்படுத்தப்பட உள்ள மாவட்ட வாழ்வாதார கடன் மேலாண்மை முகமைக்கு மாவட்ட வங்கி ஒருங்கிணைப்பாளர் பணியிடத்திற்கு தகுதியுள்ள விண்ணப்பதாரர்கள் விண்ணப்பங்களை மேற்கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் தெரிவிக்கப்படுகிறது.